## இலங்கை மின்சார சபை – 2017

---

இலங்கை மின்சார சபையின் ("சீஈபீ") 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுடிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1969 இன் 31 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்டவாறு 1969 இன் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டத்தின் 49(4) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

### 1.2 நிதிக்கூற்றுக்களிற்கான சபையின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க (எல்கேஏஎஸ்/எஸ்எல்எவ்ஆர்எஸ்) தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை ("சபை") பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சீஈபீயின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சீஈபீயின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 கணக்காய்வு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சீஈபீயின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் (எஸ்எல்ஏஎஸ்/எஸ்எல்எவ்ஆர்எஸ்) இணங்குதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) எல்கேஏஎஸ் 1 – நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

நியமத்திலுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக ரூபா 1,463,311,000 தொகையான காசு மற்றும் காசுக்கு சமனானவையின் சாதகமான மீதி ரூபா 7,217,169,000 கூட்டுத்தொகையான பாதகமான மீதிகளிற்கு எதிராக ஈடுசெய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 5,753,858,000 தேறிய தொகை எதிர்மறைத் தொகையாக நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

**(ஆ) எல்கேஏஎஸ் 2 – இருப்புக்கள் மற்றும் எல்கேஏஎஸ் 16 – ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

சீஈபீயானது அதனுடைய மூலதன மற்றும் பராமரிப்பு வேலைகளிற்காக ஏற்பட்ட ஊழியர், மூலப்பொருள் மற்றும் மேந்தலைக் கிரயங்களை பெறுமதியிடுவதற்காக மேற்படி நியமங்களிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் உண்மைக் கிரயங்களை பிரயோகிப்பதற்கு பதிலாக நியமக் கிரயங்களை பிரயோகிக்கின்றது. இதன் விளைவாக, ரூபா 5,918,929,637 கூட்டுத்தொகையான சாதகமான மூலப்பொருள் விலை முரண் மற்றும் ஊழியர் மற்றும் மேந்தலை விகித முரண்களும் அவற்றின் மீது ஏற்பட்ட ரூபா 1,053,069,877 தொகையான சாதகமற்ற களஞ்சிய விலை முரண்களும் நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருந்தன.

இதன் விளைவாக மூலதன வேலைகளிற்கான உயர்ந்தளவு நிதி ஈடுபடுத்தல் காரணமாக சீஈபீயின் செயற்பாட்டு விளைவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் உரிமை மூலதனம் என்பன குறிப்பிடத்தக்களவு பாதிக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் அவ் மூலதன வேலைகள் தொடர்பாக தேவையான தகவல்கள் கிடைக்கப்பெறாததன் காரணமாக அவை தொடர்பில் நிதிக்கூற்றுக்களிற்கான தாக்கத்தை கணக்காய்வில் மதிப்பிட முடியாதிருந்தது.

(இ) **எல்கேஏஎஸ்- 8 – கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தவறுகளிலுள்ள மாற்றங்கள்**

(i) சீஈபீயின் பணிப்பாளர் சபையால் நிறுவன கொள்கை தீர்மானம் எடுக்கப்படாமல் மேலதிக பொது முகாமையாளரால் (உற்பத்தி) அறிவுறுத்தப்பட்டவாறு ரூபா 31,604,054 மற்றும் ரூபா 1,618,736,079 பெறுமதியான துணைக் கருவிகள் முறையே செயற்பாட்டுச் செலவினங்கள் மற்றும் மூலதனச் செலவினங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. ஆகையால், அத்தகைய வகைப்படுத்தலிற்காக பிரயோகிக்கப்பட்ட அடிப்படையின் நியாயத்தன்மையினை கணக்காய்வில் ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது. மேலும், வகைப்படுத்தலிற்காக பிரயோகிக்கப்பட்ட அடிப்படை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) சீஈபீயால் தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்டு வருகின்ற முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட நடைமுறையல்லாச் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் கணக்கீட்டுக் கொள்கைகளில் குறிப்பிடப்பட்டவாறு மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. சந்தர்ப்பமொன்றாக, ரூபா 23,932,093,328 கிரயமான முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட நான்கு மின்வலு நிலையங்கள் மீளப் பெறுமதியிடப்படாமல் மின்வலு உற்பத்திக்காக தற்போதும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

(ஈ) **எல்கேஏஎஸ் 39 - நிதிக்கருவிகளை இனங்காணுதல் மற்றும் அளவிடுதல்:**
ரூபா 7,457,082,610 கூட்டுத்தொகையான பதவியணிக் கடன்பட்டோர்கள் நியமத்தின் தேவைப்பாடுகளின் பிரகாரம் அவற்றின் நியாயப் பெறுமதிகளில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) சீஈபீயின் ஓய்வூதிய நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியத்தால் மேற்கொள்ளப்பட்ட முறையே ரூபா 403,717,966 மற்றும் ரூபா 2,312,756,993 தொகையான முதலீடுகள் மற்றும் அவற்றின் மீதான ரூபா 51,399,687 தொகையான வட்டி என்பவற்றின் அறவீடானது அந்நிதிக்கருவிகள் காணப்படாததன் காரணமாக ஐயப்பாட்டிற்குரியதாகவுள்ளது. எவ்வாறாயினும், இது தொடர்பில் எவ்விதமான சீராக்கல்களும் ஏற்பாடுகளும் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிக்கவில்லை.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் (பிபிஈ) மீதி மற்றும் மீளாய்வாண்டில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பிபிஈ இன் நட்டம் என்பன சீஈபீயின் சொத்துக்களாக மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சிற்குச் சொந்தமான இரண்டு வாகனங்களை கணக்கீடு செய்ததன் காரணமாக முறையே ரூபா 14,605,980 மற்றும் ரூபா 2,086,567 தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

(இ) வெளித் தரப்பினருக்குச் சொந்தமான ரூபா 810,516 கிரயமான ஒன்பது வாகனங்கள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சீஈபீயின் கணக்குகளில் காணப்பட்டதுடன் இவ் வாகனங்கள் சில ஆண்டுகளிற்கு முன்னரிலிருந்து இடந்தவறியிருந்தன. எவ்வாறாயினும் சீஈபீயானது மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கணக்குகளில் தேவையான சீராக்கங்களை செய்திருக்கவில்லை.

(ஈ) ரூபா 1,473,735,676 வரவு மீதி (இருப்பு பற்றாக்குறை) மற்றும் ரூபா 16,654,669 செலவு மீதி (மிகை இருப்பு) என்பன ஓராண்டிற்கு மேலாக தெளிவுபடுத்தப்படாமல் இருப்பு சீராக்கல் கணக்கில் இருந்தன.

(உ) ரூபா 746,546,369 கூட்டுத்தொகையான தரகு, அகற்றல் கட்டணங்கள் போன்ற வெளிநாட்டு கொள்வனவுகள் தொடர்பான செலவினம் உரிய செலவின அல்லது சொத்துக் கணக்குகளிற்கு உறிஞ்சப்படாமல் 2013 ஆம் ஆண்டிலிருந்து லக்விஜயா மின்வலு நிலையத்தின் வழிச் சரக்குகள் கணக்கில் காணப்பட்டது.

(ஊ) அமைச்சின் 10/2434/423/034 ஆம் இலக்க தீர்மானத்தின் பிரகாரம் சீஈபீயானது லக் விஜயா மின்வலு பொறியை நிர்மாணிப்பதற்காக பெற்றிருந்த ரூபா 159,184,187,965 கடன் தொகைக்கான கடன் மற்றும் அதன் மீதான வட்டி என்பவற்றை பொதுத் திறைசேரிக்கு மீளச் செலுத்துதல் வேண்டும். எவ்வாறாயினும் பொதுத் திறைசேரியின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் உரிய கடனிற்கான வட்டியாக மீளாய்வாண்டின் போது ரூபா 3,398,152,185 தொகையையும் 2016 திசெம்பர் 31 வரை ரூபா 18,567,893,780 தொகையையும் கடனளிக்கும் வங்கிக்கு செலுத்தியிருந்த போதிலும் சீஈபீயானது மேற்படி கொடுப்பனவுகளிற்காக பணம் செலுத்தியோ அதன் கணக்குகளில் ஏற்பாடுகளை மேற்கொண்டோ இருக்கவில்லை. ஆகையால் மீளாய்வாண்டிற்கான நட்டம் மற்றும் நிறுத்திவைத்த உழைப்புக்கள் என்பன முறையே ரூபா 3,398,152,185 ஆலும் ரூபா 18,567,893,780 ஆலும் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(எ) சீஈபீயால் பேணப்படுகின்ற ஊழியர் சேமலாப நிதியத்தின் சார்பில் சீஈபீயால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 35,220,599 தொகையான செலவினங்கள் பெறவேண்டியவைகளாக கருதப்படாமல் சீஈபீயின் செலவினங்களாக கருதப்பட்டிருந்ததால் மீளாய்வாண்டிற்கான நட்டம் அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) அமைச்சரவையால் மேற்கொள்ளப்பட்ட 2015 மார்ச் 19 ஆம் திகதிய 15/0228/613/012 ஆம் இலக்க தீர்மானத்தின் பிரகாரம் பெறப்பட்ட ரூபா 820,969,500 இற்குச் சமமான ஐ.அ.டொலர் 5,412,000 கடன் மற்றும் அதன் மீதான ரூபா 5,602,295 வட்டி என்பன நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. ஆகையால் மீளாய்வாண்டின் பொறுப்புக்கள் மற்றும் நட்டம் என்பன முறையே ரூபா 820,969,500 மற்றும் ரூபா 5,602,295 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஐ) 2013 ஆம் ஆண்டிற்கு முன்னர் அரசாங்க நிறுவனங்களின் மின்வலு பிறப்பாக்கிகள், மின்தூக்கிகள் மற்றும் வளிப் பதனாக்கிகள் என்பவற்றின் விநியோகம், பராமரிப்பு மற்றும் திருத்திற்காக சீஈபீயால் மேற்கொள்ளப்பட்ட வேலைகள் அவற்றின் விலைச்சிட்டை பெறுமதிகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீடு செய்யப்படுவதற்குப் பதிலாக கிரயத்தில் பெறுமதியிடப்பட்டு அதற்கிணங்க அவை கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. இதன் விளைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பெறவேண்டியவைகள் மற்றும் நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்புக்கள் என்பன ரூபா 66,987,761 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

### 2.2.3 இணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சீஈபீயின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 49,468,844,000 தொகையான மீதிக்கும் அத்திகதியிலுள்ளவாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களில் பெறவேண்டியவையாகக் காட்டப்பட்ட நேரொத்த ரூபா 50,255,066,432 தொகையான மீதிக்கும் இடையில் ரூபா 786,222,430 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

இது தொடர்பில் சீஈபீயின் தலைவர் பின்வருமாறு கூறியிருந்தார்.

***"2013 செப்தெம்பர் 30 இல் திறைசேரிச் செயலாளரால் நடாத்தப்பட்ட கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், 2013 ஏப்ரல் 20 இலிருந்து செயற்படுகின்ற வகையில் தாமதமான பற்றுச்சீட்டுப் பெறுமதியின் (கடன் காலத்திற்கு அப்பால்) மீதான வட்டியைச் செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ரூபா 753,610,829 தாமத வட்டிக் கொடுப்பனவு சீசுபீயால் 2013 ஏப்ரல் 20 இற்கு முன்னரான எரிபொருள் கொள்வனவுடன் தொடர்புபட்டிருந்தது. ஆகையால், இதற்கு சீசுபீ பொறுப்பில்லாததால் இந்த வேறுபாட்டை இணக்கம் செய்வதற்கு வேண்டப்பட்டிருக்கவில்லை."***

எவ்வாறாயினும் 2013 ஆம் ஆண்டிலிருந்து கணக்காய்வு அறிக்கைகளில் தொடர்ச்சியாக இது சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் 2017 திசெம்பர் 31 வரையிலும் இச் சிக்கல்கள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பட்டியல் முறைமை மற்றும் அதே போல் நிதிக்கூற்றுக்கள் என்பவற்றில் சில மீதிகள் தவறவிடப்பட்டதன் காரணமாக விநியோகப் பிரிவுகள் 01, 02, 03 மற்றும் 04 இன் பட்டியல் முறைமையில் காட்டப்பட்ட 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த வியாபாரக் கடன்பட்டோர் மீதிகளிற்கும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நேரொத்த தொகைகளுக்கும் இடையே ரூபா 331,154,817 கூட்டுத்தொகையான இணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### 2.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 18,203,663,608 வியாபார கடன்பட்டோர் மீதியில் சாதாரண மற்றும் மொத்த வழங்கல்கள் இரண்டுடனும் தொடர்புடைய ரூபா 3,826,334,673 மீதி ஒரு ஆண்டிற்கு மேலாக நிலுவையாக இருந்ததுடன் அதில் ரூபா 1,929,746,044 தொகை ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாமல் நிலுவையாக இருந்தது. மேலும் ரூபா 423,764,624 தொகை 2012 ஆம் ஆண்டிலிருந்து இனங்காணப்படாததாக உள்ளது.

(ஆ) வரையறுக்கப்பட்ட லங்கா எலக்ரிசிற்றி (தனியார்) கம்பனியிடமிருந்து (எல்ஈசீஓ) பெறவேண்டிய ரூபா 46,548,248 தொகையானது எந்தவொரு அறவீட்டு நடவடிக்கையும் எடுக்கப்படாமல் ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக இருந்தது.

(இ) ரூபா 2,505,397,073 கூட்டுத்தொகையான பின்வரும் ஏனைய பெறவேண்டிய மீதிகள் எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கைகளில் தொடர்ச்சியாக சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாதிருந்தது.

| கடன்பட்டோரின் பெயர் | தொகை | விபரம் |
|---|---|---|
| | ரூபா | |
| பொதுத் திறைசேரி | 225,000,000 | வீதியை வெளிச்சப்படுத்தல் மற்றும் பராமரித்தல் கிரய அறவீடு. |

| | | |
|---|---|---|
| வரையறுக்கப்பட்ட லூட் குறூப் காஸ் ரேர்வின் கம்பனி | 8,264,352 | மேற்கு கடற்கரை மின்வலுப் பொறிக்கான நுழைவு வீதியொன்றை நிர்மாணிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள். |
| மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு | 6,142,277 | கெரவலப்பிட்டிய இணைந்த மின்வலுப் பொறியின் திறப்பு விழாவிற்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள். |
| இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை | 897,025,999 | நுண் நீர்மின் அபிவிருத்தியாளர்களுக்குச் சீஈபீயால் செலுத்தப்பட்ட கட்டணச் சீராக்கங்கள் |
| வரையறுக்கப்பட்ட ஏஈஎஸ் கெலனிதிஸ்ஸ (தனியார்) கம்பனி | 1,368,964,445 | விலை வித்தியாசங்களின் கொடுப்பனவு மீது அறவிடப்பட வேண்டிய தொகை |
| | ------------------- | |
| | **2,505,397,073** | |
| | ========== | |

(ஈ) 2016 ஆம் ஆண்டில் பொதுத் திறைசேரியால் விதிக்கப்பட்ட ரூபா 5 பில்லியன் விசேட விதிப்பனவுகளுக்கு எதிராக வழங்கப்படுவதற்கு இணங்கப்பட்டு நிதிக்கூற்றுக்களில் ஏனைய கடன்பட்டோர்களாக காட்டப்பட்டிருந்த திறைசேரி முறிகள் 2017 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் சபையால் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) 1969 இன் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டம்

(i) **47(1)(ஆ) பிரிவு** – சீஈபீயினால் பெறப்பட்ட கடன்களை மீளச் செலுத்துவதற்காக சீஈபீயானது பொதுத் திறைசேரியுடன் ஆழ்நிதியம் ஒன்றை ஸ்தாபித்துப் பேணலாம். இந் நிதியத்திலுள்ள மீதியொன்று நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த போதிலும் அது 2000 ஆம் ஆண்டிலிருந்து நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவ் ஒதுக்கக் கணக்கில் உள்ள மீதி ரூபா 17,447 மில்லியனாக இருந்தது.

(ii) **47(2)(அ) பிரிவு** – சீஈபீயின் அசையும் மற்றும் அசையாத ஆதனங்களிற்கான பெறுமானத்தேய்வை மேவுகை செய்வதற்காக சீஈபீயானது பொதுத் திறைசேரியுடன் பெறுமானத்தேய்வு ஒதுக்கமொன்றை ஸ்தாபித்து பேணலாம். எவ்வாறாயினும் அத் தேவைப்பாட்டிற்கு முரணாக 2000 திசெம்பர் 31 வரை வருடாந்தம் ரூபா 1 மில்லியன் தொகையினை மாற்றீடு செய்து அதனது நிதிக்கூற்றுக்களில் பெறுமானத்தேய்வு ஒதுக்கம் ஒன்றை சீஈபீயானது ஏற்படுத்தியிருந்ததுடன் அதன் பின்னர் எவ்வித நகர்வும் ஏற்பட்டிருக்கவில்லை. அத் திகதியில் திரண்டிருந்த ரூபா 23 மில்லியன் தொகை நிதிக்கூற்றுக்களில் எவ்வித மீளாய்வுமின்றி தொடர்ச்சியாக முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

(iii) **47(2)(ஆ) பிரிவு** – சீஈபீயின் நிதி ஸ்திரத்தன்மையினை உறுதிப்படுத்துவதன் மூலம் வருமானத்திலிருந்து அதன் மூலதன வேலைகளிற்கு நிதியளிக்கும் நோக்கத்திற்காகவும் சீஈபீ காலத்திற்குக் காலம் தீர்மானிக்கும் அவ்வாறான ஏனைய நோக்கத்திற்காகவும் சீஈபீ பொதுத் திறைசேரியுடன் பொது ஒதுக்கமொன்றை ஸ்தாபித்து பேணலாம். எவ்வாறாயினும் அத் தேவைப்பாட்டிற்கு முரணாக, சீஈபீ அதனது நிதிக்கூற்றுக்களில் ஏனைய மூலதன ஒதுக்கமொன்றை ஏற்படுத்தியிருந்ததுடன் அது 2000 ஆம் ஆண்டு முதல் நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த ஒதுக்கக் கணக்கிலுள்ள மீதி ரூபா 165.45 மில்லியனாக இருந்தது.

(iv) **1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் II ஆம் பகுதியின் 46 ஆம் பிரிவு மற்றும் 11 (அ) மற்றும் (ஆ) பிரிவுகள்** –1989 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டு முடிவிலும் உள்ளவாறான மொத்த நிலையான சொத்துக்களின் மொத்தப் பெறுமதியில் 0.1 சதவீத பங்களிப்பொன்று அந் நிதியத்திற்கு மாற்றப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் காப்புறுதி பாதுகாப்பு நிதியத்தில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 7,246 மில்லியன் தொகையை மாத்திரம் சீஈபீ முதலீடு செய்திருந்தது.

(ஆ) சீபீயானது 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரசபை அதிகாரச் சட்டத்தின் 28(3) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டவாறு நுகர்வோர் வைப்புக்களிற்கான வட்டியை செலுத்தியிருக்காததுடன் 2017 ஆம் ஆண்டிற்காக இலங்கை பொது பயன்பாட்டு ஆணைக்குழுவால் அறிக்கையிடப்பட்ட விலைவீதத்தை அடிப்படையாகக் கொண்டு கணக்காய்வாளரால் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடுகளின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளாவறு அவற்றின் மீது செலுத்தப்பட வேண்டிய வட்டி ரூபா 1,163 மில்லியனாக இருந்ததுடன் செலுத்தப்படாத திரண்ட வட்டி ரூபா 1,963 மில்லியனாக இருந்தது.

(இ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காப்புறுதி ஒதுக்க நிதியத்துடன் தொடர்புடைய ரூபா 7,088 மில்லியன் தொகையொன்று சீஈபீயின் சுய-காப்புறுதிக் கொள்கையின் பிரகாரம் முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், அத்தகைய நியதிச்சட்ட தேவைப்பாடுகளை அமுல்படுத்துவதற்காக சீஈபீயில் முறையான நிதி முகாமைத்துவமொன்று செயற்பாட்டில் இருக்கவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

---------------------------------------

### 3.1 நிதிசார் விளைவுகள்

------------------------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான சீஈபீயின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் ரூபா 13,191 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய நட்டத்துடன் ஒப்பிடும் போது ரூபா 45,729 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய நட்டத்தை விளைவித்திருந்தமையால் மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளில் ரூபா 32,538 மில்லியன் தொகையான மேலுமொரு வீழ்ச்சியை சுட்டிக்காட்டுகின்றது. நிலக்கரி இறக்குமதி மீதான விலை உயர்வு மற்றும் பெறுமதி சேர் வரி (வற்) விதிப்பனவு காரணமாக நிலக்கரியின் கிரயம் 86 சதவீதத்தால் அதிகரித்தமை இவ் வீழ்ச்சிக்கான பிரதான காரணங்களாக பங்களித்திருந்தன.

எவ்வாறாயினும், ரூபா 63,741 மில்லியன் கூட்டுத்தொகையான ஆளணி வேதனங்கள், வரிச் செலவினங்கள் மற்றும் பெறுமானத்தேய்வைக் கணக்கிற்கு எடுத்த பின்னர் மீளாய்வாண்டிற்கான சீஈபீயின் பெறுமதிச் சேர்க்கை ரூபா 26,210 மில்லியனாக இருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது இது ரூபா 21,243 மில்லியனால் அல்லது 44 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

## 3.2 பகுப்பாய்வுரீதியான நிதிசார் மீளாய்வு

-----------------------------------------------------------------------------------

### 3.2.1 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

---------------------------------------------------------------------------------

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சீஈபீயின் தொழிற்படு மூலதன நிலைமை ரூபா 49,189 மில்லியன் எதிர்மறைப் பெறுமதியொன்றாக இருந்த அதே நேரம் இது முன்னைய ஆண்டின் இறுதியிலுள்ளவாறு ரூபா 3,575 மில்லியன் எதிர்மறைப் பெறுமதியொன்றாக இருந்தது. ஆகையால் மீளாய்வாண்டின் தொழிற்படு மூலதன நிலைமை 1,276 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்த வேண்டிய மீதி ரூபா 37,004 மில்லியனால் அதிகரித்தமை இவ் வீழ்ச்சிக்கான பிரதான காரணமாக இருந்தது. மேலும் சீஈபீயானது மீளாய்வாண்டில் ரூபா 846 மில்லியன் மேலதிகப்பற்று வட்டியை செலுத்தியிருந்ததுடன் இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 3,560 சதவீத அதிகரிப்பொன்றாக இருந்தது.

### 3.2.2 உரிமை மூலதனத்திற்கான கடன்

---------------------------------------------------------------------

சீஈபீயின் தொடர்ச்சியான தேறிய நட்டம் காரணமாக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சீஈபீயின் உரிமை மூலதன மீதியானது அதற்கு நேரொத்த 4 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடும் போது 11 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. இதன் விளைவாக சீஈபீயின் உரிமை மூலதனத்திற்கான கடன் முன்னைய ஆண்டில் 53 சதவீதத்திலிருந்து மீளாய்வாண்டில் 62 சதவீதம் வரை அதிகரித்திருந்தது. மேலும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த ஈடுபடுத்திய மூலதனத்தின் 33 சதவீதம் அல்லது ரூபா 229 பில்லியன் சீஈபீயால் கடன்களினூடாக நிதியளிக்கப்பட்டிருந்தது.

### 3.2.3 இலாபத்தன்மை

----------------------------------------------

2016 ஆம் ஆண்டிற்கான ரூபா 18.08 ஆன ஒரு அலகுக்கான சராசரி கிரயத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் இது ரூபா 20.34 ஆக இருந்ததுடன் அலகு ஒன்று ரூபா 16.26 ஆன சராசரி விலையில் விற்பனை செய்யப்பட்டது (முன்னைய வருட சராசரி விற்பனை விலை அலகொன்றிற்கு ரூபா 16.18 ஆக இருந்தது). அதற்கிணங்க, மீளாய்வாண்டின் அலகொன்றிற்கான மொத்த நட்டம் ரூபா 4.08 ஆக இருந்ததுடன் அலகொன்றுக்கான ரூபா 1.90 ஆன முன்னைய வருட சராசரி மொத்த நட்டத்துடன் ஒப்பிடும் போது இது 114 சதவீத அதிகரிப்பாக இருந்தது. பின்வரும் அட்டவணையானது கட்டண வகைப்படுத்தலையும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் விற்பனை செய்யப்பட்ட மின்சாரத்தின் அலகு ஒன்றிற்கான (கேடபிள்யூஎச்) பங்களிப்பையும் காட்டுகின்றது.

| **வகை** | **அலகு ஒன்றிற்கான பங்களிப்பு (கேடபிள்யூஎச்)** | |
|---|---|---|
| | **2017** | **2016** |
| | **ரூபா** | **ரூபா** |
| உள்நாடு | (6.86) | (4.66) |
| மதத்தலங்கள் | (13.13) | (10.93) |
| பொது நோக்கம் | 3.40 | 5.82 |
| ஹோட்டல்கள் | (2.61) | (0.34) |
| கைத்தொழில் | (5.57) | (3.45) |
| அரசாங்கம் | (2.08) | 0.26 |
| எல்ஈசீஓ இற்கான மொத்த விநியோகங்கள் | (4.55) | (2.31) |
| வீதி விளக்குகள் | (20.34) | (18.08) |
| **அலகு ஒன்றிற்கான பங்களிப்பு** | **(4.08)** | **(1.90)** |

இதற்கிணங்க, பொது நோக்க கட்டண வகைப்படுத்தல் மாத்திரம் மீளாய்வாண்டின் மொத்தப் பங்களிப்பிற்கான நேர்மறை பங்களிப்பாளராக இருந்தது. முன்னைய ஆண்டின் அரசாங்க வகைப்படுத்தலின் நேர்மறை பங்களிப்பு இந்த ஆண்டில் எதிர்மறையாக வந்திருந்தது. கைத்தொழில் மற்றும் உள்நாட்டு வகைப்படுத்தல் மீதான கட்டணம் மீளாய்வாண்டிற்கான மொத்தப் பங்களிப்புக்கு ஆகக்கூடிய எதிர்மறைப் பங்களிப்பாளராக இருந்ததுடன் மதத்தலங்கள், ஹோட்டல்கள், அரசாங்கம், எல்ஈசீஓ இற்கான விற்பனைகள் மற்றும் வீதி விளக்குகள் மீதான கட்டணமும் அவற்றிற்கான சாதகமற்ற பங்களிப்புக்களை காட்டியிருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

## 4.1 செயலாற்றல்

### 4.1.1 மின்வலு உற்பத்தி மற்றும் உற்பத்திக் கிரயம் (விநியோகம் மற்றும் பரிமாற்ற கிரயம் தவிர)

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நாட்டிற்கு குறைந்த விலையில் மின்வலுவை விநியோகித்தல் சீஈபீயின் பிரதான நோக்கமாக உள்ள போதிலும் மின்வலு கொள்வனவு உடன்படிக்கைகளிலுள்ள சாதகமற்ற நிலைமைகள், அனல் மின்வலு உற்பத்திக்காக ஏற்பட்ட உயர் கிரயம் மற்றும் காற்று மற்றும் ஏனைய வழக்கமற்ற புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களிலிருந்தான குறைந்த பங்களிப்பு என்பன காரணமாக இந் நோக்கத்தை அடைந்துகொள்ள முடியாதிருந்தது.

மேலும் சீஈபீயின் நீண்ட கால உற்பத்தி திட்டம் மற்றும் பரிமாற்ற திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவதில் குறிப்பிடத்தக்களவு தாமதங்கள் அவதானிக்கப்பட்டன. இதன் விளைவாக சீஈபீயின் ஆகக் குறைந்த கிரய நோக்கத்திற்கு பாதகமாக தாக்கமளித்திருந்த அவசர மின்வலுக் கொள்வனவுகளை (ரூபா 26,628 மில்லியன் பெறுமதியான 1,240 ஜீடபிள்யூஎச்) சீஈபீ மேற்கொண்டிருந்தது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யப்பட்டு 2017 ஆம் ஆண்டின் மின்வலு உற்பத்தி நிலைமை கீழே தரப்படுகின்றது.

| மூலம் | 2017 | 2016 | மொத்த உற்பத்திக்கான பங்களிப்பின் சதவீதம் | |
|---|---|---|---|---|
| | ஜீடபிள்யூஎச் | ஜீடபிள்யூஎச் | 2017 | 2016 |
| நீர்மின் | 4,004 | 4,220 | 27 | 30 |
| அனல்மின் | 5,045 | 4,461 | 34 | 31 |
| நிலக்கரி | 5,103 | 5,047 | 35 | 36 |
| காற்று | 367 | 345 | 3 | 2 |
| ஏனைய மாற்றமடையாத புதுப்பிக்கத்தக்க சக்தி | 152 | 76 | 1 | 1 |
| **மொத்தம்** | **14,671** | **14,149** | **100** | **100** |

**(ii) தாமதமான செயற்திட்டங்கள்**

பரிமாற்ற வரிசை மற்றும் விநியோக அமைப்பு முன்னேற்ற செயற்திட்டம் மற்றும் மூன்று மின்வலு உற்பத்தி செயற்திட்டங்கள் என்பவற்றின் பூர்த்தி செய்தல் காலப்பகுதி நீடிக்கப்பட்டிருந்த போதிலும் இச் செயற்திட்டங்கள் தற்போதும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**(iii) நேர்க் கிரயம்**

இந்த ஆண்டில் நிலக்கரி மின்வலு உற்பத்தியில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு காணப்படாத போதிலும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது நிலக்கரி மின்வலு உற்பத்திக் கிரயம் ரூபா 17,301 மில்லியன் தொகையால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்திருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. மேலும் 2017 ஆம் ஆண்டிற்கான மின்வலுக் கொள்வனவுக் கிரயம் மற்றும் எரிபொருள் கிரயம் என்பன முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது முறையே ரூபா 7,502 மில்லியன் மற்றும் ரூபா 7,768 மில்லியனால் அல்லது 9 சதவீதம் மற்றும் 15 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் மீளாய்வாண்டில் அனல் மின்வலு உற்பத்தி 13 சதவீதத்தால் மாத்திரமே அதிகரித்திருந்தது. மின்வலு உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்ட நேர்க் கிரயத்தின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| விபரம் | 2017 | | 2016 | |
|---|---|---|---|---|
| | ரூபா. மில்லியன் | சதவீதம் | ரூபா. மில்லியன் | சதவீதம் |
| எரிபொருள் | 57,842 | 27 | 50,074 | 28 |
| மின்வலு கொள்வனவு | 89,254 | 42 | 81,752 | 46 |
| நிலக்கரி | 37,505 | 18 | 20,204 | 11 |
| செயற்பாடு மற்றும் பராமரிப்பு | 11,727 | 6 | 12,083 | 7 |
| பெறுமானத்தேய்வு | 14,476 | 7 | 14,797 | 8 |
| **மொத்த நேர்க் கிரயம்** | **210,804** | **100** | **178,910** | **100** |

## 4.2 முகாமைத்துவ நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 35 வருட பயன்தரு பொருளாதார ஆயுட்காலத்துடன் 2005 இல் ரூபா 18,254,550 இற்காக கொள்வனவு செய்யப்பட்ட இரண்டு நிலைமாற்றிகள் (transformers) பெறுகை செய்முறையில் இனங்காணப்பட்டிருந்த குறுகிய மின்சுற்றுவழி நிலைமைகளுடன் (short circuit conditions) இவை இல்லாமையால் முறையே 5 ஆண்டுகள் மற்றும் 7 ஆண்டுகளினுள் செயற்பாட்டிலிருந்து முடிவுறுத்தப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், இக் கொடுக்கல் வாங்கலிற்கு பொறுப்பான நபர்களை புலனாய்வு செய்து இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 செப்தெம்பர் 11 இல் ரூபா 7,221,707 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட மூவாயிரம் பொருத்தும் கருவிகள் (பின் 33 கேவி) இழிவான தரப் பிரச்சனை காரணமாக பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் அவை மாற்றீடு செய்யப்படாமல் 2018 செப்தெம்பர் 30 வரை களஞ்சியங்களில் விளைவற்றிருந்தன. இது தொடர்பில் பெறப்பட்ட செயலாற்றல் முறியின் செல்லுபடியாகும் காலப்பகுதி 2016 பெப்ரவரி 26 இல் காலங்கடந்திருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(இ) 2017 ஏப்ரலில் உதுருவசன்தய செயற்திட்டத்தின் கீழ் 2014 ஆம் ஆண்டில் இனங்காணப்பட்ட ரூபா 52,550,929 இருப்பு பற்றாக்குறை தொடர்பில் உள்ளக கணக்காய்வு பிரிவால் விஷேட புலனாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் இந்த பற்றாக்குறைக்கு பொறுப்பாகவுள்ள உத்தியோகத்தர்களுக்கு எதிராக 2018 செப்தெம்பர் 30 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், இது தொடர்பில் 2015 இல் குற்றப் புலனாய்வு திணைக்களத்தால் திருகோணமலை நீதவான் நீதிமன்றத்தில் நீதிமன்ற வழக்கொன்று (வழக்கு இலக்கம் பீ/1164/15) தொடரப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் நீதிமன்ற வழக்கின் தற்போதைய நிலைமை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

(ஈ) 2006 நவம்பர் 20 தொடக்கம் 2012 பெப்ரவரி 20 வரையான காலப்பகுதியின் போது சொத்து முகாமைத்துவப் பிரிவில் (மின்வலுப் பொறி) ஏற்பட்டிருந்த ரூபா 3,674,861 இருப்பு பற்றாக்குறைக்கு பொறுப்பான நபரிற்கெதிராக முறையான புலனாய்வு முடிவடைந்த போதிலும் 2018 ஆகஸ்ட் 16 வரை சபையால் உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அதே ஊழியர் இன்னொரு அலுவலகத்தில் மோசடியொன்றிற்கு பொறுப்பாக இருந்ததுடன் மோசடிப் பெறுமதியாக ரூபா 99,155 அறவீடு செய்ததன் பின்னர் அவரது கடமை முடிவுறுத்தப்பட்டிருந்தது.

(உ) ரூபா 3,789,893 இருப்பு பற்றாக்குறைக்குப் பொறுப்பான உத்தியோகத்தரொருவர் புலனாய்விற்காக நியமனம் செய்யப்பட்ட குழுவால் பரிந்துரை செய்யப்பட்டவாறு நட்டத்தை அறவீடு செய்யாமல் 2011 ஒக்தோபர் 15 இல் ஓய்வுபெறுவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தார். மேலும் மேற்படி முக்கியமான தொகை சீராக்கல் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாமல் கணக்குப் புத்தகங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஊ) ரூபா 4,860,885 பெறுமதியான இடர், போக்குவரத்து, பண்டிகை முற்பணம் மற்றும் விஷேட முற்பணம் போன்ற பதவியணியினர் கடன்கள் அறவீட்டு நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாமல் நிலுவையாகவிருந்தன.

## 4.3 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

ரூபா 17,936,845,512 மொத்த நுகர்வுப் பொருளிருப்பில் 11 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 2,051,605,881 தொகை 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மெதுவாக அசையும், அசைவற்ற மற்றும் சேதமடைந்த இருப்பாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. இவ்வளவு அசையாத மற்றும் மெதுவாக அசையும் இருப்பினை பேணுதலானது சேதமடைதல், வைத்திருத்தல் கிரயம் மற்றும் மோசடி போன்றவை அதிகரிப்பதற்கு காரணமாகலாம்.

## 4.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2007 திசெம்பர் 13 இல் சம்பள சீராக்கலின் போதும் 2015 மே 20 இல் கூட்டு உடன்படிக்கையினை கருத்தில் கொள்ளும் போதும் உழைக்கும் போதே செலுத்தும் வரிப் (பிஏவைஈ) பொறுப்பை ஊழியர்களிற்கு மாற்றுவதற்கு அமைச்சரவையால் தீர்மானம் எடுக்கப்பட்டது. எனினும் சீஈபியானது அமைச்சரவையால் எடுக்கப்பட்ட மேற்படி தீர்மானத்தை மீறுவதன் மூலம் 2010 தொடக்கம் 2017 வரையான காலப்பகுதியின் போது உரிய ஊழியர்களின் சம்பளங்களிலிருந்து அதனை கழிக்காமல் அதனுடைய சொந்த நிதியிலிருந்து ரூபா 3,294,348,130 உழைக்கும் போதே செலுத்தும் வரியை செலுத்தியிருந்தது. மீளாய்வாண்டின் போது உழைக்கும் போதே செலுத்தும் வரியாக ரூபா 676,508,227 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களில் சீஈபீயின் செலவினமாக காட்டப்பட்டிருந்தது.

மேலும் 2001 மே 20 ஆம் திகதிய 1706/18 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தால் குறித்துரைக்கப்பட்ட காசற்ற நலன்களின் பெறுமதி ஒவ்வொரு ஊழியர்களின் உழைக்கும் போதே செலுத்தும் வரியை கணிப்பிடும் போது கருத்தில் கொள்ளப்பட வேண்டியிருந்தது. எனினும், இந் நோக்கத்திற்காக தனிப்பட்ட பயன்பாட்டிற்கான விடுதிகள், குடியிருப்புக்கள் மற்றும் மோட்டார் வாகனங்கள் போன்றவற்றின் ஏற்பாடுகள் போன்ற காசற்ற நலன்களை சீஈபீ கணக்கிற்கு எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2007 நவம்பர் 14 இல் அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட தீர்மானம் மற்றும் 2009 மே 26 இன் 39 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகள் என்பவற்றிற்கு முரணாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மீது சீஈபீயின் பதவியணியினரிற்கு காலத்திற்கு காலம் வெவ்வேறு பதவியணியினர் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. அத்தகைய பதவியணியினர் படிகளாக 2017 ஆம் ஆண்டு மற்றும் 2016 ஆம் ஆண்டில் முறையே ரூபா 1,930 மில்லியன் மற்றும் ரூபா 1,222 மில்லியன் கூட்டுமொத்தமான அத்தகைய படிகள் செலுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(இ) 1998 மார்ச் 08 ஆம் திகதிய 130 ஆம் இலக்க அரச முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 10 சதவீதம் தொடக்கம் 14 சதவீதம் வரையான வீச்சிலான வட்டி வீதத்தில் வாகனக் கடன்களை வழங்குவதற்குப் பதிலாக சீஈபீயானது 4.2 சதவீத வட்டி வீதத்தில் இக் கடன்களை வழங்கியிருந்தது. மேலும், சீஈபீயானது பல திரவ பிரச்சனைகளை எதிர்கொள்கின்ற போதிலும் கட்டுப்பாடுகள் எதுவுமின்றி பதவியணியினர் கடன்கள் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4.5 சர்ச்சைத் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சீஈபீயானது பல வருடங்களாக மின்சாரத்தை எல்ஈசீஓ இற்கு விற்பனை செய்திருந்ததுடன் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து எரிபொருளை கொள்வனவு செய்திருந்த போதிலும் இவ் இரண்டு நிறுவனங்களிற்குமிடையேயான சுமூகமான செயற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்காக அவ் இரண்டு தரப்பினர்களுடனும் விற்பனை மற்றும் கொள்வனவு உடன்படிக்கைகள் காணப்படவில்லை.

(ஆ) சீஈபீயானது உப-கடன் உடன்படிக்கைகளிலுள்ள நிபந்தனைகளின் பிரகாரம் பொதுத் திறைசேரிக்கு ரூபா 2,171,027,353 வட்டியை செலுத்தியிருக்காததுடன் வருடாந்தம் 1 சதவீதம் முதல் 2 சதவீதம் வரையான வீச்சிலான மேலதிக வட்டியானது மேற்படி வட்டிக் கொடுப்பனவு தாமதம் தொடர்பாக செலுத்தப்பட வேண்டியிருந்தது. மேலும் ரூபா 13,090,107,000 மொத்த பெறுமதிக்கான நான்கு உப-கடன்கள் தொடர்பான உடன்படிக்கைகள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

## 4.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்

சீஈபீயின் வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக வழங்கப்பட்ட கடன்களிலிருந்து, நிதிகள் காலரீதியாக பயன்படுத்தப்படாததன் காரணமாக கடப்பாட்டுக் கட்டணங்களாக 2017 ஆம் ஆண்டில் கடனளிக்கும் முகவரால் ரூபா 41,829,697 தொகை கழிக்கப்பட்டிருந்தது.

## 4.7 மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சீஈபீயின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுத் திட்டம் (எஸ்ஓஆர்) நீண்டகாலமாக நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மனித வளப் பிரிவிலுள்ள பிரதான பதவியாக பிரதிப் பொது முகாமையாளர் (ஆளணி) உள்ள போதிலும் அப்பதவிக்கு தேவையான தகைமைகள் மற்றும் அனுபவங்கள் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் (எஸ்ஓஆர்) குறித்துரைக்கப்படாதிருந்ததுடன் ஏனைய சேவைகளுக்கு விசேடமாக மின்னியல் பொறியியலாளர்கள் இப்பதவியணியை பெற்றுக்கொள்வதற்கு இயலுமான முறையில் இருந்தது.

(இ) ஏற்கனவேயுள்ள எஸ்ஓஆர் இன் பிரகாரம், மொத்த மனித வள உத்தியோகத்தர் (எச்ஆர்ஓ) பதவியணியில் 50 சதவீதமானவை வெளியிலிருந்து நிரப்பப்படுவதுடன் அச் சதவீதம் ஒவ்வொரு ஆண்டிலும் படிப்படியாக அதிகரித்து 85 சதவீதம் வரை உயர்த்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், சீஈபீயின் வரலாற்றில் இரண்டு பொறியிலாளர்கள் பிரிவுத் தலைவர்களின் தொழிற்பாடுகளை நீண்ட காலமாக மேவுகை செய்துவருகின்றதனால் பதவியுயர்வுத் திட்டத்தில் அவ் வெளிவாரியாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட ஊழியர்களிற்கு தெளிவான பதவியுயர்வு பாதையொன்று அவதானிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மனித வள முகாமையாளர் (எச்ஆர்எம்) மற்றும் மனித வள உத்தியோகத்தர் (எச்ஆர்ஓ) போன்ற பதவிகளிற்கு நேரடி ஆட்சேர்ப்பிற்குத் தேவையான அனுபவமானது 100 ஊழியர்களிற்கு மேற்பட்ட நிறுவனமொன்றில் மனித வளத் துறையில் 06 ஆண்டுகளாக இருக்கின்றமை சீஈபீயில் கையாளப்பட வேண்டிய பதவியணிப் பலத்துடன் ஒப்பிடுகையில் அது போதுமானதல்ல.

## 5.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளுதல்

ஐக்கிய நாடுகளால் அறிமுகப்படுத்தப்பட்ட "2030 நிலைபேறான அபிவிருத்திக்கான நிகழ்ச்சிநிரல்" இலுள்ள 17 இலக்குகளில் "மலிவான நம்பகத்தன்மையான, நிலைபேறான மற்றும் நவீன சக்தி சேவைகளிற்கான அணுகுதலை உறுதிப்படுத்துதல்" 7 ஆவது இலக்காக உள்ளதுடன் இவ் இலக்கு சீஈபீயின் நோக்கெல்லையினுள் வந்திருக்கவில்லை. ஆகையால் இலங்கையில் 2030 அளவில் இவ் இலக்கை அடைந்துகொள்ளுவதை உறுதிப்படுத்துவதற்குப் பொறுப்பாக சீஈபீ உள்ளது. எவ்வாறாயினும் இவ் இலக்கை அடைந்துகொள்வதற்கான இலக்குகள் மற்றும் இலக்குக் கட்டங்களை சீஈபீ இன்னமும் இனங்கண்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 6.1 சமூகப் பொறுப்புக்கள்

லக்விஜயா மின்வலு நிலையத்திற்காக 2017 யூலை இலிருந்து சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் (ஈபிஎல்) மாகாண சூழல் பாதுகாப்பு அதிகாரசபையால் வழங்கப்பட்டிருக்கவில்லை.

## 6.2 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்

முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட முப்பத்தியிரண்டு கணக்காய்வுப் பந்திகள் மீளாய்வாண்டிலும் தீர்வு காணப்படாமல் முன்கொண்டுவரப்பட்டிருந்தன.

## 7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| (அ) | சொத்துக்கள் முகாமைத்துவம் | (i) விநியோகப் பிரிவிலுள்ள மூலதன வேலைகளினை பூர்த்தி செய்வதிலுள்ள நீண்டகால தாமதம் |
| | | (ii) நாடாளாவிய ரீதியில் அமைந்துள்ள சீபிசீயின் காணிகளின் அளவை மதிப்பீடு மற்றும் பாதுகாப்பை துரிதப்படுத்தல். |
| | | (iii) வாகனங்களிற்கான நாளதுவரையாக்கப்பட்ட தரவுத் தளத்தை பேணுதல் |
| (ஆ) | பெற வேண்டியவைகள் மற்றும் செலுத்த வேண்டியவைகள் | கடன்பட்டோர் மற்றும் ஏனைய வருமதிகளை உரிய காலத்தில் அறவிடுதல். |
| (இ) | மனித வளங்கள் முகாமைத்துவம் | நிறுவனத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கான வகிபங்கு மற்றும் பரப்பளவின் பிரகாரமான மனித வளங்கள் முகாமைத்துவம் |
| (ஈ) | இருப்புக் கட்டுப்பாடு | (i) இருப்புப் பதிவேடுகளை முறையாக பேணுதல் |
| | | (ii) இருப்பு பற்றாக்குறைகள் மற்றும் மிகைகளை தவிர்ப்பதற்காக நிலக்கரி இருப்புக் கையாளுகை மீதான பொருத்தமான கட்டுப்பாடுகளை ஸ்தாபித்துப் பேணுதல். |
| (உ) | செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாடு | (i) கால வரையறைகளினுள் செயற்திட்டங்களை பூர்த்தி செய்தல். |
| | | (ii) பொறியியல் மதிப்பீட்டை நடைமுறைச்சாத்தியமாக தயாரித்தல். |
| (ஊ) | கணக்கீட்டு முறைமை | கணக்கீட்டு முறைமையிலுள்ள உள்ளகக் கட்டுப்பாடுகளின் பலவீனங்கள் காரணமாக 2013 ஆம் ஆண்டிலிருந்து சீசீபீயின் நிதிக்கூற்றுக்கள் தொடர்ச்சியாக மீளக் குறிப்பிடப்படுதல். |